www.tamilarangam.net

# இன்றைய உண்மைகள்

ஸ்ரீலங்கா அரச படைகளின் மூர்க்கத்தனமான முற்றுகைகள்!

*)குடாநாட்டின் மீது முன்னெப்போதுமில்லாத அளவிற்கு அரசு அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. படிப்படியான முறையில் திட்டமிட்டு, ஆயுதக் குவிப்பையும், முகாம்களின் விஸ்தரிப்பையும் மேற்கொண்டு வந்த அரச படைகள், போராட்ட பலவீனங்களைப் பயன் படுத்தி, போராளிகள் மீதும், பொது மக்கள் மீதும் மூர்க்கத்தனமானதாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது.

*)'தீவிரவாதிகளோ, அரசாங்கமோ எவராவது ஒரு தரப்பினர் வெற்றி பெறும் வரையில், அரசின் தாக்குதல்கள் ஓயாது' என ஜயவர்த்தனா பகிரங்கமாகஅறிவித்துள்ளார்

*)தரைமார்க்கமாக முன்னேறமுடியாத பகுதிகளில், 10 விமானங்களில் இருந்தும், 8 ஹெலிகொப்டர்களில் இருந்தும், விமானப்படையினர் குண்டு பொழிகின்றனர்.
கரைப்பிரதேசங்கள் மீது, 10 கடற்படைக்கப்பல்களில் இருந்து, கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடாத்துகின்றனர்.
9 இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்திய வண்ணம், தரைமார்க்கமாக வெளியேறும் நடவடிக்கையில் இராணுவத்தினர் முனைந்துள்ளனர்.

*)பொது மக்களின் ஏராளமான உடமைகள், எண்ணற்ற வீடுகள், பல கட்டிடங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், ஆலயங்கள், தொழிற்துறைகள் என்பன கடுமையான சேதத்திற்குள்ளாகி உள்ளன.
எண்ணற்ற பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், பெருமளவில் பொது மக்கள் வதிவிடங்களை இழந்து அகதிகளாக நாதியற்று வெளியேறுகின்றனர்.

## நாதியற்ற மக்கள்

போராளிகளின் மறைவிடங்களையும் அதனைச் சூழ உள்ள பகுதிகள் மீதும் கடுமையானதாக்குதல்களை நிகழ்த்தப் போவதாகவும், எனவே பொது மக்களை ஆலயம், பாடசாலை, போன்ற கட்டிடங்களில் சென்று தஞ்சம் புகுமாறு அரசு விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கில் பொது மக்கள் மேற்படி கட்டிடங்களில் தஞ்சமடைந்தனர்.

வேறுவழியின்றி நம்பி நகர்ந்து தஞ்சமடைந்த புகலிடங்கள் மீது, ஈனத்தனமான முறையில், அரச விமானங்கள் குண்டு பொழிந்து தாக்கியதில், அநாதைகளாக நாதியற்ற நிலையில், எண்ணற்ற பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

சொந்த இருப்பிடங்கள், தற்காப்பு பதுங்கு குழிகள், புகலிடம் தேடிய பொது இடங்கள் எதிலும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை!

## கழகம் அன்று சொன்ன வார்த்தை

புலிகள் இயக்கத்தினர் தாம் விரும்பியபடி தனித்து சண்டையில் ஈடுபட முனைந்து, அரச படைகளின் திட்டமிட்ட உக்கிரமமான தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது தடுமாறுகின்றனர். பல முன்னணி உறுப்பினர்களை இழந்துள்ளதோடு, திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் எதுவுமின்றி, தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் எவ்வளவு காலத்தை ஓட்ட முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த நிலை ஏன் வந்தது?

ஆயிரக் கணக்கில் பயிற்றப்பட்ட இராணுவப் பிரிவைக் கொண்டிருந்த கழகத்தை, போலிச் சாட்டுக்களை முன்வைத்து, தளத்தில் இருந்து ஒதுங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்ட போது, தகராறைத் தவிர்க்கும் நோக்கோடு, தற்காலிகமாக தளத்தில் செயற்பாடுகளை நிறுத்த நேர்ந்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

இதன் பின்பும் சொல்லிக் காட்ட முடியாத இடர்பாடுகளுக்கு மத்தியிலும், இன்று வரை போராட்ட உணர்வுகளில் இருந்து விடுபடாது, கழக இலட்சிய சுவடுகளை மீண்டும் எமது மண்ணில் பதிக்கும் வரை காத்துக்கொண்டிருக்கிறோம்.

# உங்களைத்தான் புலிகளே!

இந்நச் சூழ்நிலையில், எமது மக்களைப் பாதுகாக்கும் பணியில், கழகத்தின் பங்களிப்பின் அவசியத்தை, புலிகள் இயக்கத்தினர் இனியாவது வெளிப்படையாக ஒத்துக்கொள்ளட்டும்.

தனித்து நின்று போராடுகிறோம் என்ற 'அந்த' போலிப் பெருமையை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக, அநியாயமாக, போராடிக் கொண்டிருக்கும் இளம் புலிகளையும், போராட்ட உணர்வு கொண்ட மக்களையும் வீணே பலி கொடுக்காதீர்கள்

# ஓ... இனிய மக்களே!

கழகத்தில் தங்களை இணைத்து மக்களின் விடிவிற்காக உயிரைப் பணயம் வைத்து, போராட புறப்பட்ட தோழர்கள், இந்தச் சூழ்நிலையில் ஆகக் குறைந்தது உங்களை பாதுகாக்கும் பணியிலாவது தங்களை ஈடுபடுத்தி , உங்களுடன் வாழவோ அன்றில் , உங்களுடன் சாகவோ முடியாமல் தளத்திலும், தமிழகத்திலும் இன்று தள்ளப்பட்டிருக்கிறோம்.

அரச படைகளின் முர்க்கத்தனமான தாக்குதல்கள் நிலைபெற்றிருக்கும் இந்தநிலையில் புலிகளுடன் சண்டையிடுவதை எக் காரணம் கொண்டும் நாம் விரும்பவில்லை.

இச் சூழ்நிலையில், எங்கள் தவிப்பை, வேதனைக் குமுறலை நிட்சயமாக . நீங்கள் உணர்வீர்கள் என்றே நம்புகின்றோம்.

# இனி வரும் காலங்கள் நமதே.

இருப்பினும், இந்த நிலை அதிக காலம் நீடிக்க நாம் அனுமதிக்கப் போவதில்லை மக்களின் விடிவிற்கான விடுதலை முன்னெடுப்புக்கள் நாலா பக்கங்களில் இருந்தும் வெளிவரத்தான் போகிறது.

மக்கள் ஒதுங்கி ஓடுவதற்கான சூழ்நிலையை விடுத்து, நாமனைவரும் நிலைத்து, நின்று போராடுவதற்கான சூழ்நிலையையும், போராட்டத் தளத்தையும் உருவாக்கவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் எம்மனைவரையும் நெருக்குகிறது என்பதே இன்றைய உண்மையாகும்.

## "தியாகங்கள் என்றும் வீண்போவதில்லை"

PUBLISHED BY the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT) BM BOX 7313, LONDON WC1 3xx.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்